தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
வடவள்ளி	98436 52523
வால்பாறை	94863 24619

நீதிமன்றத் தீர்ப்புகளை அமல்படுத்தக் கோரி ஆட்சியரிடம் மனு

கோவை, ஆக. 24: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நீதிமன்றத் தீர்ப்புகளை அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, வீடு ஒதுக்கீட்டாளர்கள் மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

கோவை மாவட்ட பொதுமக்கள் குறைகேட்புக் கூட்டம் ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. வருவாய் அலுவலர் சுரேந்திரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆனந்தகுமார், சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் வாணிலெட்சுமி ஜெகதம்மாள் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

நீதிமன்றத் தீர்ப்புகளை உடனடியாக அமல்படுத்த கோரி கண்களில் கருப்பு துணியை கட்டியபடி மனு அளிக்க வந்திருந்த கணபதி மாநகர் வீட்டு உரிமையாளர் நலப் பாதுகாப்பு சங்கத்தினர்.

கூட்டத்தில், கணபதி மாநகர் வீட்டு உரிமையாளர் நலப் பாதுகாப்பு சங்கத்தினர் கண்ணில் கருப்புத் துணியைக் கட்டியபடி ஆட்சியரிடம் மனு அளிக்க வந்தனர். இது குறித்து அவர்கள் கூறும்போது, நடுவர்மன்றதீர்ப்பின்படி இறுதிவிலை நிர்ணயம் செய்து அரசாணை வெளியிட வேண்டும். கிரையப் பத்திரம் பெறாதவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும். ஏற்கெனவே கூடுதல் தொகையை செலுத்திய ஒதுக்கீட்டாளர்களுக்கு 6 சதவீதவட்டியுடன்திருப்பிக்கொடுக்க வேண்டும்.

வீட்டு வசதி வாரிய ஒதுக்கீட்டாளர்கள் தொடர்பாக இதுவரை உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நடுவர் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளை உடனடியாக அமல்படுத்த வேண்டும். 33 ஆண்டுகளாக தொடரும் இந்த சிக்கலுக்கு வரும் 28-ஆம் தேதி நடைபெறும் துறை மானியக் கோரிக்கையில் விவாதித்து தீர்வு காண வேண்டும். இல்லாவிட்டால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று தெரிவித்துள்ளனர்.

ஆட்சியரிடம் மனு அளிக்க வந்த சுக்கிரவாரபேட்டையைச் சேர்ந்த ஆர்.மணி (76) என்ற மூதாட்டி, குடும்ப பூர்விக சொத்து விவகாரத்தில் வருவாய்த் துறை அதிகாரிகள் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக குற்றஞ்சாட்டி, ஆட்சியர் அலுவலகம் எதிரில் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

பூர்விக சொத்தில் எனக்கு உரிமை இருக்கும் நிலையில், அதைத் தகுந்த ஆவணங்களுடன் நிரூபிப்பதற்கு அவகாசம் வழங்காமலும் முறையான அறிவிப்பு இல்லாமலும் பட்டாவில் இருந்து எனது பெயரை நீக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பாரதிய கோவை மாவட்ட பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தூய்மைப் பணியாளர் பிரிவின் மாவட்ட பொதுச் செயலர் எஸ்.ஸ்டாலின் பிரபு அளித்த மனுவில், கோவை மாநகராட்சி 26-ஆவது வார்டில் ஒப்பந்த தூய்மைப் பணியாளராக கடந்த 2024 வரை பணியாற்றியதண்டபாணிஎன்பவருக்கு, அவர் பணியில் இருந்தபோது பாதுகாப்பற்ற முறையில் குப்பையில் வீசப்பட்ட மருத்துவக் கழிவில் இருந்த ஊசி காலில் குத்தியது.

இதனால் அவருக்கு கடுமையான தொற்று ஏற்பட்டு கால் அகற்றப்பட்டது. இதனால் அவர் வாழ்வாதாரத்தை இழந்து மாற்றுத்திறனாளியாக இருக்கிறார். அவர் 10 ஆண்டுகள் பணியாற்றியுள்ள நிலையில் அவரிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதித் தொகை முழுமையாக அவருக்கு கிடைக்கவும், மருத்துவ செலவுகளுக்கான இழப்பீடு கிடைக்கவும், அவருக்கு நிரந்தர மாற்றுப்பணி வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த குறைகேட்புக் கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 715 மனுக்கள் வழங்கப்பட்டன. இவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

இழப்பீடு வழங்காததால் 2 அரசுப் பேருந்துகள் ஜப்தி

கோவை, ஆக. 24: அரசுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு ஊதிய வேறுபாடு நிலுவைத் தொகைக்கான இழப்பீடு வழங்காததால், கோவையில் இரு அரசுப் பேருந்துகள் நீதிமன்ற உத்தரவின்பேரில் ஜப்தி செய்யப்பட்டன.

கோவை மாவட்டம், இருகூர் பகுதியைச் சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் (36). இவர் மேட்டுப்பாளையம் பணிமனைக்கு உள்பட்ட பகுதியில் கடந்த 2015-ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியில் சேர்ந்தார். 3 ஆண்டுகளுக்குப் பிறகு (2018), அவர் பணி நிரந்தரம் செய்யப்பட்டார். இதில் பணியில் சேர்ந்து ஓராண்டு நிறைவடைந்தவுடன் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பது விதி. ஆனால், 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பணி நிரந்தரம் செய்யப்பட்டதால், ஊதிய வேறுபாடு நிலுவைத் தொகை வழங்க உத்தரவிடக் கோரி, கோவை முதன்மை தொழிலாளர் நீதிமன்றத்தில் பாலகிருஷ்ணன் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அரசுப் பேருந்து ஓட்டுநரான பாலகிருஷ்ணனுக்கு ரூ.2.13 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது. அதன் பிறகும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாததால், ஓட்டுநர் தரப்பில் அண்மையில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை திங்கள்கிழமை விசாரித்த நீதிபதி ஏ.கே.பாபுலால் சம்பந்தப்பட்ட பேருந்தை ஜப்தி செய்ய உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து, 63- ஏ என்ற அரசுப் பேருந்தை நீதிமன்ற ஊழியர்கள் ஜப்தி செய்து நீதிமன்றத்தில் நிறுத்திவைத்தனர்.

தேனி மாவட்டம், கோபாலபுரம் பகுதியைச் சேர்ந்தவர் வேல்முருகன் (45), கோவை போக்குவரத்துக் கழகத்தில் கடந்த 2015-ஆம் ஆண்டு ஓட்டுநராகப் பணியில் சேர்ந்தார். அதன்பிறகு 2017-ஆம் ஆண்டு பணி நிரந்தரம் செய்யப்பட்டார். இவரும் இதே நீதிமன்றத்தில், ஊதிய வேறுபாடு நிலுவைத் தொகை வழங்க உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் பணி நாளை கணக்கிட்டு வேல்முருகனுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிட்டது.

அதன் பிறகும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாததால், நீதிமன்றத்தில் வேல்முருகன் நிறைவேற்று மனு தாக்கல் செய்தார். மனுவை திங்கள்கிழமை விசாரித்த நீதிபதி ஏ.கே. பாபுலால் அரசுப் பேருந்தை (எண் 55) ஜப்தி செய்ய உத்தரவிட்டார். இதனடிப்படையில் அந்தப் பேருந்தை நீதிமன்ற ஊழியர்கள் ஜப்தி செய்தனர்.

வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்க வேண்டும்

கட்டடத் தொழிலாளர் சங்க மாநாட்டில் தீர்மானம்

கோவை, ஆக. 24: வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்க வேண்டும் என கோவையில் திங்கள்கிழமை நடைபெற்ற கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோவையில் திங்கள்கிழமை நடைபெற்ற கட்டடத் தொழிலாளர் சங்க மாவட்ட மாநாட்டில் பேசுகிறார் ஏஐடியூசி தேசிய துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி.

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத்தொழிலாளர்சங்கத்தின் கோவை மாவட்ட 11-ஆவது மாநாடு மாவட்டத் தலைவர் ஆர்.நாராயணன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி தேசிய துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., கோவை மாவட்ட ஏஐடியூசி கவுன்சில் பொதுச் செயலர் சி.தங்கவேல், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சு.பழனிசாமி ஆகியோர் பங்கேற்று மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

இந்த மாநாட்டில், நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் உதவித்தொகையை ரூ. 4 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும், பணியிட விபத்தில் மரணமடையும் தொழிலாளர் குடும்பத்துக்கு வழங்கப்படும் ரூ.8 லட்சம் உதவித் தொகையை ரூ.20 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் பாதிக்கப்படும்போதும் சாதாரண காலங்களிலும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவக் காப்பீடு கிடைக்கும் வகையில் இஎஸ்ஐ மருத்துவ வசதி திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

தனியார், அரசு கட்டுமானப் பணிகள் அனைத்திலும் உள்ளூர் தொழிலாளர்களுக்கு 80 சதவீத பணியிடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு சட்டப்படியானபாதுகாப்புகள், தங்குமிட வசதிகள், தமிழ்நாட்டில் நிலவும் சம்பளத் தொகை அனைத்தும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, மாநாட்டை சங்கத்தின் மாநில துணைப் பொதுச்செயலர் எம்.முனுசாமி தொடங்கிவைத்தார். மாநில பொதுச் செயலர் என்.செல்வராஜ், மாவட்டச் செயலர் எல்.செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள், தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

வால்பாறையில் ரேஷன் கடையை சேதப்படுத்திய காட்டு யானைகள்

வால்பாறை, ஆக.24: வால்பாறை எஸ்டேட் பகுதிக்கு வந்த காட்டு யானைகள் ரேஷன் கடையை சேதப்படுத்தின.

வால்பாறைஎஸ்டேட் பகுதிகளில் கடந்த சில நாள்களாக யானைகள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. பகல் நேரங்களில் வன எல்லையில் காணப்படும் யானைகள், இரவு நேரத்தில் எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கு வருகின்றன.

இதனிடையே சின்கோனா எஸ்டேட் பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு வந்த மூன்று யானைகள் அங்கு அமைந்துள்ள ரேஷன் கடையின் ஜன்னல் கதவை முட்டித் தள்ளின. பின்னர் கடைக்குள் புகுந்து அங்கிருந்த அரிசி மூட்டைகளை வெளியே இழுத்துப்போட்டதில் அரிசிகள் சிதறின.

லாரிக்குள் ஓட்டுநர் சடலம் மீட்பு

கோவை, ஆக. 24: கோவை வடவள்ளி பகுதியில் செப்டிக் டேங்க் லாரிக்குள் ஓட்டுநர் சடலம் மீட்கப்பட்டது.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியைச் சேர்ந்தவர் அடைக்கலராஜ் (41). இவர் கோவையில் தங்கி லாரி ஓட்டுநராகப் பணியாற்றி வந்தார். கோவை வடவள்ளி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை செப்டிக் டேங்க் லாரியை இயக்கியுள்ளார்.

பின்னர், மருதமலை சாலை, காளிதாஸ் நகர், பெட்ரோல் விற்பனை நிலையம் அருகே இவரது லாரி வெகு நேரமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதனால், சந்தேகமடைந்த அந்த வழியாக சென்றவர்கள் லாரியின் இடது பக்கக் கதவை திறந்து பார்த்தபோது இருக்கையில் ஓட்டுநர் அடைக்கலராஜ் சடலம் கிடந்தது தெரியவந்தது.

இதுகுறித்து தகவலறிந்து அங்கு வந்த வடவள்ளி போலீஸார் சடலத்தை மீட்டு விசாரணை நடத்தினர். நெஞ்சு வலியால் அவர் உயிரிழந்திருக்கலாம் என போலீஸார் தெரிவித்தனர்.

வால்பாறை எஸ்டேட் சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

ஈட்டியார் எஸ்டேட் சாலையில் முறிந்து விழுந்த மரத்தை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட தீயணைப்புத் துறையினர்.

வால்பாறை, ஆக.24: வால்பாறையில் தொடர் மழை காரணமாக எஸ்டேட் சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கோவை மாவட்டம், வால்பாறை பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக பரவலாக கனமழை பெய்து வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கிய மழை திங்கள்கிழமை காலையிலும் தொடர்ந்தது. தொடர் மழை காரணமாக வால்பாறையில் உள்ள பல்வேறு எஸ்டேட் பகுதி சாலைகளில் மரக் கிளைகள் முறிந்து விழுந்தன.

இதில் சின்னக்கல்லாறு அருவிக்குச் செல்லும் வழியில் உள்ள ஈட்டியார் எஸ்டேட் சாலையில் திங்கள்கிழமை காலை பெரிய மரம் முறிந்து விழுந்தது. தகவலறிந்து அப்பகுதிக்கு சென்ற வால்பாறை தீயணைப்புத் துறையினர் இயந்திரங்கள் மூலம் மரத்தை வெட்டியெடுத்து அப்புறப்படுத்தினர். இதனால் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வாணவராயர் கல்லூரியில் தென்னை மரம் ஏறும் பயிற்சி

பொள்ளாச்சி, ஆக.24: மணக்கடவு வாணவராயர் வேளாண்மை கல்லூரியில் தென்னை மரம் ஏறும் பயிற்சி வழங்கப்பட்டது.

பொள்ளாச்சியை அடுத்த மணக்கடவு வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில் 10 ஆண்டுகளாக விரிவாக்கத் துறை சார்பில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தென்னை வளர்ச்சி வாரியத்தின் கொக்கோ மித்ரா திட்டத்தின்கீழ் தென்னை மரம் ஏறும் பயிற்சி மூன்று நாள்கள் அளிக்கப்பட்டது. இதில் பெரும்பதி தென்னை மரம் ஏறுவோர் சங்கத்தைச் சேர்ந்த 10 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

கல்லூரி துணை முதல்வர் காளிதாஸ், தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குநர் ஜெயஸ்ரீ, பயிற்சி ஒருங்கிணைப்பாளர் சிற்பி பாலசுப்பிரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர். பேராசிரியர்கள் கிருஷ்ணமூர்த்தி, எலக்கியா, துர்காதேவி ஆகியோர் பயிற்சி குறித்து பேசினர்.

பசுமை தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திருவேங்கடம், கல்லூரி முதல்வர் பிரபாகர், தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அரவாழி உள்பட பலர் பங்கேற்றனர்.

பிஎஸ்ஜி கோப்பைக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டி

நாளை தொடங்குகிறது

கோவை, ஆக. 24: பிஎஸ்ஜி கோப்பைக்கான 60-ஆம் ஆண்டு ஆடவர், முதலாம் ஆண்டு மகளிர் அகில இந்திய கூடைப்பந்து போட்டிகள் புதன்கிழமை (ஆகஸ்ட் 26) தொடங்குகின்றன.

இது குறித்து பிஎஸ்ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் ஆர்.ருத்ரமூர்த்தி, செயலர் டி.பழனிசாமி ஆகியோர் கோவையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியது:

கோவையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பிஎஸ்ஜி கோப்பையை அறிமுகப்படுத்தும் பிஎஸ்ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் ஆர்.ருத்ரமூர்த்தி, செயலர் டி.பழனிசாமி உள்ளிட்டோர்.

பிஎஸ்ஜி கோப்பைக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டியை கடந்த 59-ஆண்டுகளாக பிஎஸ்ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு 60-ஆவது அகில இந்திய கூடைப்பந்து போட்டி ஆகஸ்ட் 26-ஆம் தேதி தொடங்கி 30-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. பிஎஸ்ஜி கல்வி நிறுவனத்தின் நூற்றாண்டையொட்டியும், கூடைப்பந்து போட்டியின் 60-ஆவது ஆண்டை நினைவுகூரும் வகையிலும் இந்த ஆண்டு முதல் மகளிருக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டியும் நடத்தப்படுகிறது.

ஆடவர் பிரிவில் இந்த ஆண்டு தமிழ்நாடு இந்தியன் வங்கி, தில்லி விமானப்படை, லோனாவாலா கடற்படை, தில்லி ஓஎன்ஜிசி, கேரள மின் வாரிய அணி, சென்னை ஹிந்துஸ்தான் பல்கலைக்கழக அணி, ரெஸ்ட் ஆஃப் தமிழ்நாடு ஆகிய 7 அணிகளும், மகளிர் பிரிவில் செகந்திராபாத் தென் மத்திய ரயில்வே, ஹூப்ளி தென் மேற்கு ரயில்வே, கேரள மின்வாரிய அணி, கோவை மாவட்ட மகளிர் அணி ஆகியவை பங்கேற்கின்றன.

ஆடவர் பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணிக்கு சுழற்கோப்பையுடன் ரூ.1 லட்சம் பரிசளிக்கப்படுகிறது. 2, 3, 4-ஆவது இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு முறையே ரூ.75 ஆயிரம், ரூ.40 ஆயிரம், ரூ.30 ஆயிரம் பரிசளிக்கப்படுகிறது. மகளிர் பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணிக்கு சுழற்கோப்பையுடன் ரூ.75 ஆயிரம் பரிசளிக்கப்படுகிறது. 2-ஆவது இடம் பிடிக்கும் அணிக்கு ரூ.50 ஆயிரம், 3, 4-ஆவது இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம், சிறந்த வீரர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பரிசளிக்கப்படுகிறது.

மேலும் இந்த கூடைப்பந்து போட்டி பரிசளிப்பு விழாவின்போது, பிஎஸ்ஜி கல்வி நிறுவனங்களில் பயின்று கூடைப்பந்து விளையாட்டில் புகழ்பெற்ற முன்னாள் வீரர்கள், தேசிய போட்டிகளில் வெற்றி பெற்ற பிஎஸ்ஜி கல்வி நிறுவன மாணவ, மாணவிகளுக்கு பண முடிப்பு வழங்கப்படுகிறது. 26-ஆம் தேதி மாலை நடைபெறும் தொடக்க விழாவில் பாரத ஸ்டேட் வங்கியின் கோவை மண்டல மேலாளர் ஆர்.ஆர்.காயத்ரி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

வரும் 30-ஆம் தேதி பிஎஸ்ஜி நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில், இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் தலைவரும், தமிழ்நாடு பொதுப் பணித் துறை, விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சருமான ஆதவ் அர்ஜுனா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார். மேலும், சக்தி நிறுவனங்களின் தலைவர் எம்.மாணிக்கம், சிஆர்ஐ பம்ப்ஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநரும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் தலைவருமான ஜி.செல்வராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கின்றனர்.

போட்டிகள் பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள சர்வதேச உள்விளையாட்டு அரங்கில் தினசரி மாலையில் நடைபெறும் என்றனர்.

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: எண். 15/9A, வள்ளுவர் தெரு.
சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Tel : (0422) 2491501/02
website: www.acmills.in, email: ambika@acmills.in

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

அன்பார்ந்த பங்குதாரர்களே,

நிறுவனத்தின் 38வது பங்குதாரர் வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) செப்டம்பர் 29, 2026, செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.00 மணியளவில் பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக இனி அனுப்பபடவிருக்கும் அறிவிப்பில் (AGM Notice) இடம்பெற்றுள்ள விஷயங்களை கருத ஒளித்தோற்ற மாநாடு (Video/ conferencing / VC) / பிற ஒலியுணர்/ காட்சி வழிமுறைகள் (OAVM) எனும் மின்னணு நுட்பங்களின் வாயிலாக நடைபெறும்; அனுப்பபடவிருக்கும் பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பு நிறுவனங்கள் சட்டம் 2013-கீழ் பொருந்தக்கூடிய சட்ட பிரிவுகள் மற்றும் இந்திய காப்பாவண பரிமாற்று வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015-ன் கீழ் பொருந்தக்கூடிய விதிமுறைகள், மேலும் பொருந்தக்கூடிய நிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் பொது சுற்றறிக்கைகள் (MCA Circulars) மற்றும் இந்திய காப்பாவண பரிமாற்று வாரியத்தின் சுற்றறிக்கைகள் (SEBI Circulars) ஆகியவற்றின் வழிகாட்டுதலுக்கு இணங்க இந்த கூட்டமானது வழக்கமாக உறுப்பினர்கள் பொது இடத்தில் கூடி சந்திக்கும் முறையில் இல்லாமல், ஒளித்தோற்ற (Video conferencing) மாநாடாக கூட்டப்படும்..

38வது பொதுக்குழு கூட்ட அறிவிப்பு (AGM Notice) மற்றும் 2026-ம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் உள்ளடக்கிய ஆண்டு அறிக்கை (Annual Report) ஆகியவை மின்னஞ்சல் வாயிலாக மட்டும், தங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்திடமோ/ பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) அல்லது தங்கள் டெபொசிட்டரி பங்கேற்பாளர்களிடமோ (DP) பதிவு செய்திருக்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் அனுப்பப்படும். உறுப்பினர்கள் 38வது AGM-ல் பங்கேற்பதற்கான வழிமுறைகள் மற்றும் கூட்டத்திற்கு முந்தைய தொலை-மின்னணு- வாக்களிப்பு அல்லது கூட்டம் நடைபெறும் சமயத்தில் நடைபெறும் மின்னணு-வாக்களிப்பு ஆகியவற்றின் மூலம் வாக்களிக்கும் முறை ஆகியவை 38வது AGM அறிவிப்பில் (AGM Notice) விவரிக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் சமயத்தில், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் நிறுவனங்கள் சட்டம் , 2013-ன் பிரிவு 103-ன் கீழ் கூட்டத்திலுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை (Quorum) கணக்கிடும் நோக்கத்திற்காக கருத்தப்படுவார்கள்.

38 வது பங்குதாரர் வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு (AGM Notice) மற்றும் ஆண்டு அறிக்கை (Annual Report) நிறுவனத்தின் இணையதளத்தில், அதாவது www.acmills.in என்ற முகவரியிலும் மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களான BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited-ன் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் காணப்பெறலாம்.

தங்கள் மின்னஞ்சல் முகவரியையோ அல்லது எலக்ட்ரானிக் க்ளியரிங் சர்வீஸ் (ECS) மூலம் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறும் பொருட்டு வங்கிக் கணக்கு விவரங்களை பதிவு செய்ய விரும்பும் பங்குதாரர்கள் கீழே உள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம்:

i) டிமேட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளரால் அறிவுறுத்தப்பட்ட செயல்முறையின்படி, தங்கள் டிமேட் கணக்கில் விவரங்களைப் பதிவு செய்ய / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ii) ஆவண வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், investor.helpdesk@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சல் முகவரியில் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவராகிய MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் இடம் பரிந்துரைக்கப்பட்ட படிவம் ISR-1 மற்றும் பிற தொடர்புடைய படிவங்களை தாக்கல் செய்வதன் மூலம் விவரங்களைப் பதிவு செய்ய புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் www.acmills.in என்ற நிறுவனத்தின் இணையதளத்தில் பரிந்துரைக்கப்பட்ட படிவங்களை பதிவிறக்கம் செய்யலாம்.

பங்குகளை ஆவண வடிவத்தில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது நிறுவனம் / RTA இடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாதவர்கள், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொலை மின்-வாக்களிப்பு அல்லது மின்னணுவாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம். AGM-ன் போது பங்குதாரர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் முறையானது AGM Notice- இடம்பெற்றுள்ளது.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களை நிறுவனம்/RTA/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

MCA சுற்றறிக்கை(கள்) மற்றும் SEBI-ன் சுற்றறிக்கைகளுக்கு இணங்க மேற்கண்ட தகவல்கள் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவலுக்கும் மற்றும் பயனுக்காகவும் வழங்கப்படுகிறது.

ஈவுத்தொகை (டிவிடெண்ட்) மீதான வரிப்பிடித்தம் குறித்த பொதுவான தகவல்

கம்பெனியின் இயக்குனர்கள் கூட்டம் கடந்த 2026 ஆகஸ்ட் 08ம் தேதி நடந்தது. கூட்டத்தில், 2026 மார்ச் 31 உடன் முடிவடைந்த நிதியாண்டிற்கு ரூ. 10/- முகமதிப்புள்ள ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 37 (370%) ஈவுத்தொகை (டிவிடெண்ட்) வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஈவுத்தொகையானது, கம்பெனியின் ஆண்டு பொது குழு கூட்டத்திற்கு பின் பங்குதாரர்களின் ஒப்புதல் பெற்று வழங்கப்படும். நிதி சட்டம் 2020க்கு இணங்க, 1 ஏப்ரல் 2020 என்ற தேதியிலிருந்து, ஈவுத்தொகை விநியோக வரி ரத்து செய்யப்பட்டு, ஈவுத்தொகையின் மீதான வரி பங்குதாரர்களின் வருமான வரியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஈவுத்தொகையிலிருந்து சரியான விகிதத்தின் வரி பிடித்தம் செய்ய ஏதுவாக தேவையான ஆவணங்கள் / உறுதியேற்பு ஆவணங்களை பங்குதாரர்கள், கம்பெனி பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவருக்கு (ஆர்டிஏ) , MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் investor.helpdesk@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சலுக்கும் மற்றும் நிறுவனத்திற்கு ambika@acmills.in என்ற மின்னஞ்சலுக்கும் செவ்வாய்க்கிழமை, 22 செப்டம்பர் 2026- க்குள்ளாகவோ அல்லது அன்றைய தினமோ அனுப்பவும்.

மேலும் விவரங்களுக்கு அல்லது பங்குமாற்று முகவருக்கு investor.helpdesk@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சலிலும் மற்றும் நிறுவனத்திற்கு ambika@acmills.in என்ற மின்னஞ்சலிலும் தொடர்பு கொண்டு தேவையான விளக்கங்களையும், உதவிகளையும் பெறலாம்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 24.08.2026

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
பி.வி. சந்திரன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00628479

தெற்கு இரயில்வே

மதுரை கோட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : U-TRD-OT-26-27-VI தேதி : 21.08.2026

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / ட்ராக்ஷன் விநியோகம், தெற்கு இரயில்வே, மதுரை - 625 016 அவர்கள், பின்வரும் பணிகளுக்காக நற்பெயர் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

வ. எண்.	ஒப்பந்தப்புள்ளி எண் மற்றும் பணி பற்றிய விவரம்
1	U-TRD-OT-26-27-VI-1 மதுரை கோட்டம் - TPJ - DG பிரிவில் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை கருத்தில் கொண்டு, மிகவும் நாள்பட்ட TRD சொத்துடைமைகளை மாற்றியமைத்தல்
2.	U-TRD-OT-26-27-VI-2 மதுரை கோட்டம் - புதிய ஆரியங்காவு, எடமன் மற்றும் தென்மலை - ல் OHE மாறுபாட்டுப் பணிகள் மற்றும் SCT - PUU பிரிவில் நடைமேடை நீட்டிப்பு தொடர்பாக, AYVN SSP மறு அமைவிடத்திற்காக, PSI மாறுபாட்டுப் பணிகள்.
3.	U-TRD-OT-26-27-VI-3 மதுரை கோட்டம் - மானாமதுரை இரயில் நிலையத்தில் ட்ராக் மெஷின் சைடிங் அமைத்தல் தொடர்பாகவும் மண்டபம் இரயில் நிலையத்தில் 3 மீ அகலம் கொண்ட நடை மேம்பாலம் அமைத்தல் தொடர்பாகவும் OHE மாறுபாட்டுப் பணிகள்

வ. எண்.	ஒப்பந்தப் புள்ளியின் தோராய மதிப்பு ரூ.	ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளி படிவக் கட்டணம் ரூ.	பணியை முடிப்பதற்கான காலம்
1.	91,57,708.98/-	1,83,200/-	இல்லை	6 மாதங்கள்
2.	93,17,724.02/-	1,86,400/-	இல்லை	6 மாதங்கள்
3.	22,28,069.13/-	44,600/-	இல்லை	4 மாதங்கள்

*இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதி வரம்பு அம்சம் பொருந்தும்.

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் :
15.09.2026 அன்று 15.00 மணி

விருப்பமுள்ளவர்கள், விவரங்கள் அறிய http://www.ireps.gov.in இணையதளத்தை பார்க்கவும். தகுதி வரம்பு, பிற விவரங்கள், கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகிய விவரங்களுக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடும்படி ஒப்பந்தப்புள்ளியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து சேர்த்தல் / திருத்தம், கால நீட்டிப்பு, ஐயப்பாடு தீர்த்தல் ஆகியவை இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். தனியாக செய்தித்தாள்களில் வெளியிடப்பட மாட்டாது. ஒப்பப்புள்ளியாளர்கள் அவ்வப்போது இணையதளத்தை பார்த்து அண்மை நிலவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

கோட்ட இரயில்வே மேலாளர் (ட்ராக்ஷன் விநியோகம்)
தெற்கு இரயில்வே, மதுரை - 625 016